**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 03-02-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-02-03 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-02-04 | 2023-02-05 | 2023-02-06 | 2023-02-07 | 2023-02-08 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 30.0 | 10.0 | 0.0 | 0.0 | 10.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 25.0 | 25.0 | 28.0 | 28.0 | 28.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 24.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 86 | 86 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10.0 | 10.0 | 10.0 | 8.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 70 | 70 | 70 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 6 | 6 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

பிப்ரவரி 04,05 மற்றும் 08 வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 25.0°C - 28.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 24.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12- 18 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

கடந்த நாட்களில் பெறப்பட்ட மழையுடன் மிதமான முதல் எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும். மருந்து தெளிப்பதையும், நீர் பாசனம் ஒத்திவைக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

தற்போது பெய்த மழையை பயன்படுத்தி சணப்பை தக்கைப் பூண்டு போன்ற பசுந்தாள்உர பயிர்களை பயிரிடவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தண்ணீர் வடிய வாய்ப்பில்லாத இடங்களில் நெல் பயிரில் துத்தநாகம் மற்றும் தழை சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. அறிகுறிகள் - இளம் மஞ்சள் நேர்கோடுகள் வளர் இலையில் காணப்படும். இலையின் அடிப்பாகம் பச்சையாக இருக்கும் - கதிரில் மணிபிடித்தல் குறைந்து காணப்படும் இதை சரி செய்ய ஒரு ஏக்கருக்கு 2 கிலோ யூரியா ஒரு சதம் ஒரு கிலோ ஜிங்க சலபேட்டை (0.5%) கலந்து இலை வழியாக மழை நின்றவுடன் தெளிக்க வேண்டும் தேவையெனில் 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பாகற்காய் | தொடர்ந்து மேகமூட்டமான வானிலை காரணமாக. கொடிவகை காய்கறி பயிர்களில் சாம்பல் நோய் பரவலாகக் காணப்படும். இதனை கட்டுப்படுத்த டைனோகாப் @ 1 மில்லி / அல்லது கார்பென்டாசிம் 0.5 கிராம் / தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் கன்றுகளின் உடல் வெப்ப நிலை குறையாமல் இருக்க கன்றுகள் குடிப்பதற்கு சற்று கதகதப்பான நீர், மழைக் காலம் முடியும் வரை கொடுக்கவும். இரவு நேரங்களில் குளிர்ந்த காற்று மற்றும் வரும் வாரங்களில் காற்றின் ஈரப்பதம்அதிகமாக இருப்பதால், இளங்கன்று களுக்கு நுரையீரல் அழற்சி போன்ற நோய் தாக்கத்திற்கு வாய்ப்புள்ளது எனவே இரவு நேரங்களில் கொட்டகைகளில் அடைப்பது சிறந்தது. ஆடு, கோழிகளை கூரைகளின் கீழ் பகுதியிலும் அருகிலும் (நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் ஆடு மாடுகளின் சாணம் சிறுநீர், கோழிக்கழிவு ஆகியவற்றை உடனுக்குடன் சுத்தப்படுத்த வேண்டும், இவற்றை முறையாக கடைபிடித்தால், நோய்த் தாக்கத்தில் இருந்து கால்நடைகளைப் பாதுகாக்கலாம். |

## பட்டுப்புழு வளர்ப்பு குறிப்பிட்ட ஆலோசனை:

| பட்டுப்புழு வளர்ப்பு | பட்டுப்புழு வளர்ப்பு குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மல்பெரி | நிகழும் வானிலையின் காரணமாக பட்டுக்கூடு உற்பத்தி இடங்களில் ஊசி ஈ தாக்குதல் வர வாய்ப்பு உள்ளதால் இதனை கட்டுப்படுத்த நிசோலின்க்ஸ் தைமஸ் என்ற ஒட்டுண்ணியினை 100 முட்டைத் தொகுதிகளுக்கு ஒரு லட்சம் ஒட்டுண்ணிகள் என்ற விகிதத்தில் மாலை நேரங்களில் வெளியிடவும், பீளிச்சிங்பவுடர் மருந்து தெளித்த இரண்டு நாட்கள் கழித்து ஒட்டுண்ணிகள் வளர்ப்பு அறையில் விடவும். |
| மல்பெரி | நிகழும் வானிலையின் காரணமாக மல்பெரிச் செடியை தாக்கும் வேரழுகல் வர வாய்ப்புள்ளதால் இதனை கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு செடிக்கு 25 கிராம் என்ற அளவில் தொழு உரத்துடன் கலந்து தாக்கப்பட்ட செடிகளுக்கும் மற்றும் அதன் அருகிலுள்ள செடிகளுக்கும் இடவேண்டும் அல்லது உயிர்ப்பூஞ்சாணக் கொல்லியான ‘பேசில்லஸ் சப்டிலிஸ்’ என்ற |

| பட்டுப்புழு வளர்ப்பு | பட்டுப்புழு வளர்ப்பு குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | பாக்டீரியாவை ஒரு செடிக்கு 25 கிராம் என்ற அளவில் நடவு செய்யும் போதோ அல்லது கவாத்து செய்யும் போதோ வேர்ப்பகுதியில் இடவேண்டும். |